**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 10.09.2024**

**O.S. 26/2022**
**வா.சா. 1 – ராஜரெத்தினம்**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தின் அசல் ஆவணத்தை நான் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். ஏன் என்றால் அந்த அசல் எங்கள் கையில் கிடைக்கவில்லை. வா.சா.ஆ 1 அத்தாட்சி நகல் 2007 ம் ஆண்டே எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவண சொத்துக்கள் பொருட்டு பெயர் மாற்றம் வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தில் எனக்கு மற்றும் என் உடன் பிறந்த இரண்டு சகோதரர் பெயருக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எங்கள் மூவர் பெயரிலும் தனிப்பட்டா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் மூவர் பெயருக்கும் தனிப்பட்டா இதுவரை பிற்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு முன்னர் என் தகப்பனார் தாக்கல் செய்த அசல் வழக்கு 90/1995 மற்றும் 522/1999 வழக்குகளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 90/1995 ல் 21.12.1996 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 522/1999 வழக்கு 20.07.2004 அன்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கை நான் 2022 ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால சரிதான். என் சகோதரர் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ 18 அதிகார பத்திரத்தை நான் படித்து பார்த்தேன் வா.சா.ஆ 18 ல் 1, 2 சாட்சிகள் என குறிப்பிட்டுள்ள இடத்தில் எந்த சாட்சிகளும் கையொப்பம் இட வில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 18 முழுமை பெறாத ஆவணம் என்றாலும் அதன்

அடிப்படையில் நான் என் சகோதரருக்காக சாட்சியம் அளகிக்கவோ வழக்கு நடத்தவோ இயலாது என்றால் சரியல்ல.

என் நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். அதில் பக்கம் மூன்று பத்தி 4 ஏவில் நான் குறிப்பிட்டுள்ளது போல் வா.சா.ஆ 2 மற்றும் 3 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வா.சா.ஆ 2 மற்றும் 3 குறிப்பிடவில்லை என்றாலும் நான் என் நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான தகவல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.96/1990 மற்றும் 522/1999 தீர்ப்புகளில் விதி 9 ன் படி அறிவிப்பு வழங்கி அதன் பின்னர் உரிய வரிவிதிப்பு செய்யப்படவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தீர்ப்புகளில் குறிப்பிடவில்லை.

கதவு எண் 23, 23 சி சொத்துக்களுக்கு வரி உயர்வு செய்யப்பட்டதாக நான் இந்த வழக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். கதவு எண் 23 எனக்குரியது. கதவு எண் 23 சி என் சகோதரர் சுப்பையாக்குரியது. வழக்கு பட்டிகையில் மற்ற கட்டிடத்தையும் சேர்த்துள்ளோம் என்றால் அவற்றை குறிப்பிட்டுள்ளோம். கதவு எண் 23, 23 சி கட்டிடத்தை தவிர மற்ற கட்டிடங்களுக்கான வரியை செலுத்தி விட்டோம் என்றால் ஆம். 2022 வரை செலுத்திவிட்டோம். கதவு எண் 23, 23 சி வணிக கட்டிடம் என்றால் சரிதான். அந்த கட்டிடங்களை எத்தனை நபர்களுக்கு வாடகைக்கு கொடுத்துள்ளோம் என்றால் கதவு எண் 23 நான்கு நபர்களுக்கும் கதவு எண். 23 சி 6 நபர்களுக்கும் வாடகைக்கு கொடுத்துள்ளோம். சாட்சி 6 நபர்கள் இரு பகுதிகள் ஒரே நபருக்கு வாடகைக்கு கொடுத்ததால் ஒரே நபருக்கு வாடகைக்கு கொடுத்ததாக தெரிவித்தார்.

கதவு எண் 23, 23 சி நாகர்கோவில் நகரத்தில் மேற்கு ரத வீதியில் பிரதானமான இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வாடகைதாரரிடம் முன் வைப்பு தொகை பெறப்பட்டுதான் வாடகைக்கு கொடுத்தோம் என்றால் என் அப்பா காலத்தில் கொடுத்தது அது பற்றி எனக்கு தெரியாது. கட்டடத்திற்கு

தேவையான அடிப்படை வசதிகள் மாநகராட்சி செய்து கொடுத்துள்ளது என்றால் தண்ணீர் இணைப்பு உள்ளது நாங்கள் வேண்டாம் என அதனை துண்டிக்க சொல்லியுள்ளோம் கட்டிடத்தில் கழிவு நீர் வெளியேற கழிவு நீர் வடிகால் உள்ளது குப்பைகள் எனக்கு தெரிந்து அப்புறப்படுத்த வில்லை. அனுதினமும் குப்பைகள் அகற்றப்படுகிறது என்றாலும் நான் அவ்வாறு அப்புறப்படுத்துவதில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ 8 ஆவணத்தை 05.03.2019 அன்று எழுதியுள்ளேன். 28.02.2019 என தட்டச்சு செய்து அதனை திருத்தப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 8 பக்கம் 2 பத்தி 4 இ ல் என் அப்பா 2007 ம் ஆண்டுவரை செலுத்திய நிறையதொகை கணக்கு செய்யப்படவில்லை என சொல்லியுள்ளேன் அவ்வாறு தொகை செலுத்தியதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டார் ஆஜர் செய்யலாம்.வா.சா.ஆ 8 ஆவணம் 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 8 ஆவணத்திற்கு 3 ம் பிரதிவாதி வா.சா.ஆ 10 பதிலில் அவ்வாறு 1994 முதல் 2007 வரை தொகை செலுத்தியதாக சொல்லியதற்கு ஆவணம் இருந்தால் அதனை கொடுத்து கணக்கை சரிசெய்ய சொன்னார்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ 10 கதவு எண். 23, 23 சி க்கு உரியது என்றால் சரிதான். வா.சா.ஆ 11 கதவு எண் 23 சி க்கு உரியது என்றால் சரிதான். வா.சா.ஆ 11 வரிவிதிப்பானது சட்டப்படியானது என்றாலும் அரசு உத்தரவுகளின் படி பெற்ப்பிக்கப்பட்டது என்றாலும் அனைவருக்கும் வரிவிதிப்பது, வரி உயர்வு செய்வது போல் முறைப்படி என் கட்டிடத்திற்கும் வரி உயர்வு செய்து விதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் கட்டிடத்திற்கு மட்டும் அல்லாமல் என் கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் உள்ள அனைத்து வணிக கட்டிடத்திற்கு வரி உயர்வு செய்வது போல் என் கட்டிடத்திற்கும் வரிஉயர்வு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ 13 கடிதத்ததை 1 ம் வாதி 3 ம் பிரதிவாதிக்கு எழுதியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 14 கடிதத்தை நான் 3 ம் பிரதிவாதிக்கு எழுதினேன்

என்றால் சரிதான். வா.சா.ஆ 13 பக்கம் 2 பத்தி 44 ல் என் அப்பா 2007ம் ஆண்டுவரை செலுத்திய நிறையதொகை கணக்கு செய்யப்படவில்லை என 1ம் வாதி சொல்லியுள்ளார் அவ்வாறு தொகை செலுத்தியதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டார் ஆஜர் செய்யலாம். வா.சா.ஆ 14 லிலும் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் செலுத்தியதாக சொல்லும் தொகை குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நாங்கள் வா.சா.ஆ 13 மற்றும் 14 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது போல் பணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் செலுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு செலுத்திய தொகையை கணக்கில் வரவு வைக்கவில்லை என உயர் அதிகாரிகளுக்கு நாங்கள் கடிதம் எதுவும் எழுதவில்லை என்றால் ஆம் மாநகராட்சிக்கு மட்டும் எழுதியுள்ளோம்.

வா.சா.ஆ 19 அறிவிப்பில் 2007ம் ஆண்டு வரை என் தகப்பனார் பணம் செலுத்தியுள்ளார் என்றும் அதை கணக்கில் வரவு வைக்கவிலை்ல என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 2, 3 மற்றும் வா.சா.ஆ 20, 21 வழக்கு தீர்ப்பு தீர்ப்பாணைகளின் படி 3ம் பிரதிவாதியால் என் அப்பாவிற்கு விதி 9 அறிவிப்பு வழங்கப்பட்டது என்றாலும் அதற்கு என் அப்பா பதில் கொடுக்கவிலலை என்றாலும் சரியல்ல. நான் அதனை மறைத்து வா.சா.ஆ 2, 3 மற்றும் வா.சா.ஆ 20, 21 வழக்கு தீர்ப்பு தீர்ப்பாணைகளை மதிக்கவிலலை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி எந்த நீதிமன்ற தீர்ப்பையும் மதிக்காமல் இல்லை என்றாலும் நீதிமன்ற தீர்ப்புபடி செயல்பட்டு உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 2, 3 மற்றும் வா.சா.ஆ 20, 21 வழக்கு தீர்ப்பு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு 12

ஆண்டுகள் கடந்து விட்டதால் அதன் பெயரில் இந்த வழக்கில் பரிகாரம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்தேன். அதில் சொல்லியுள்ளது எல்லாம் சரி என்றால் சரியல்ல.

வா.சா.ஆ1 உயில் ஆவணத்தின் படி பெயர் மாற்றம் செய்து தர கேட்டதாகவும் பாக்கி தொகையை செலுத்தினால் தான் பெயர் மாற்றம் செய்து தருவதாக சொன்னார்கள் என குறிப்பிட்டுள்ளேன். கதவு எண் 23, 23சி க்கு தான் பாக்கி உள்ளது என்றாலும் மற்ற கட்டிடங்களுக்கு இன்று தேதிவரை வரி செலுத்தி வருகிறேன என்றாலும் சரிதான். பெயர் மாற்றம் செய்ய என்ன வழி முறைககள் கடைபிடிக்க வேண்டும் என்று எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் என்றால் நான் சட்டம் பயின்றுள்ளேன் நான் வழக்கறிஞராக பணிபுரியவில்லை. வழக்கில் நான் கோரியுள்ள பாரிகாரங்கள் ஏதும் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தரப்பினர்களாக சேர்க்க அவசியமில்லை என்றாலும் அவர்களை அவசியமின்றி வழக்கில் கட்சி சேர்த்துக்ளேன் என்றாலும் சிரியல்ல. 3ம் பிரதிவாதி கொடுத்த கேட்பு அறிவிப்பு அரசு உத்தரவின் படி கொடுக்கப்பட்டது என்றாலும் அதன்படி நாங்கள் வரி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.